# நிலை மாற்றம்: பள்ளிக்கு நேர்மறையானதொரு தொடக்கம்

*நிலைமாற்றக் கற்றல் மற்றும் மேம்பாட்டு அறிக்கையினைப் பூர்த்தி செய்வதற்கு குடும்பங்களுக்கு உதவும் வழிகாட்டுதல்கள்*

## பள்ளிக்கு நேர்மறையானதொரு தொடக்கம் ஏன் முக்கியம்?

பள்ளியில் ஒரு நேர்மறையான தொடக்கம் இருந்தால், உங்கள் பிள்ளை மேலும் நன்றாகக் கற்றுக் கொள்ளவும், மழலையர் பள்ளியிலிருந்து பள்ளிக்குச் செல்லும்போதும், அவர்களின் எதிர்காலக் கற்றலிலும் மகிழ்ச்சியாக உணரவும் உதவும். ஒரு நேர்மறையான நிலைமாற்றம் உங்கள் குழந்தையின் கற்றல் மற்றும் வளர்ச்சியின் தொடர்ச்சிக்கு உதவுகிறது. உங்கள் குழந்தையின் முந்தைய மற்றும் தற்போதைய அனுபவங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் அவர்கள் பாதுகாப்பாகவும், நம்பிக்கையுடனும் மற்றும் பிணைப்புடனும் உணர உதவுகிறது. பள்ளியில் ஒரு நேர்மறையான தொடக்கம் அவர்களை மேலும் நெஞ்சுரம் மிக்கவர்களாக உருவாக உதவும்.

## நிலைமாற்றக் கற்றல் மற்றும் மேம்பாட்டு அறிக்கை என்றால் என்ன?

மழலையர் சேவைகள், பள்ளிகள், வெளிப்புற பள்ளிநேரப் பராமரிப்புச் (OSHC) சேவைகள் மற்றும் குடும்பங்கள் குழந்தைகளின் கற்றல் மற்றும் நல்வாழ்வை ஆதரிக்க ஒன்றாகச் செயல்படுகின்றன. அவர்கள் நிலைமாற்றக் கற்றல் மற்றும் மேம்பாட்டு அறிக்கையைப் (TLDS) பயன்படுத்தி தகவலைப் பகிர்ந்து கொள்கிறார்கள். பள்ளி செல்லும் ஒவ்வொரு குழந்தைக்காகவும் மழலையர் சேவையினால் இது எழுதப்படுகிறது.

மழலையர் சேவைகள் மற்றும் பள்ளிகளுக்கு இடையே உங்கள் குழந்தையின் கற்றல், மேம்பாடு மற்றும் நல்வாழ்வு பற்றிய தகவல்களை TLDS பகிர்ந்து கொள்கிறது. TLDS ஆனது உங்கள் குழந்தையின் ஆர்வங்கள், திறன்கள் மற்றும் திறன்களின் விரைவு நோக்கு ஒன்றை வழங்குகிறது. மேலும் உங்கள் குழந்தைக்கு ஆதரவளிப்பதற்கான தனிப்பட்ட அணுகுமுறைகள் மற்றும் கற்பித்தல் உத்திகளை அடையாளம் காட்டுகிறது.

உங்கள் பிள்ளை பள்ளி செல்லத் தொடங்கும் போது அவர்களின் கற்றலைப் புரிந்துகொள்ளவும் ஆதரிக்கவும் TLDS உங்களுக்கு உதவும். TLDS இல் உள்ள தகவல்கள், அறக்கட்டளை ஆசிரியர்களுக்கு உங்கள் குழந்தையைத் தெரிந்துகொள்ளவும், பொருத்தமான கற்பித்தல் திட்டங்களைத் திட்டமிடவும் உதவுகிறது. உங்கள் குழந்தை OSHC இல் இருந்தால், TLDS அவர்களின் நேரத்தைத் திட்டமிடவும் உதவுகிறது.

TLDS இல் உங்கள் குழந்தையின் பெயர், பிறந்த நாள், புகைப்படம், உங்கள் பெயர், தொடர்புத் தகவல் உள்ளிட்ட சில தனிப்பட்ட விவரங்கள் உள்ளன. உங்கள் குழந்தைக்கு ஆதரவளித்த பிற குழந்தைப் பருவ நிபுணர்களின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களும் இதில் இருக்கலாம்.

உங்கள் பிள்ளையின் TLDS இற்கு பங்களிப்பது, பள்ளி தொடங்கும் முன்னர் நீங்களும் உங்கள் குழந்தையும் ஒன்றாகப் பங்கேற்கக்கூடிய பள்ளி நடவடிக்கைகளுக்கான மாற்றங்களில் ஒன்றாகும்.

## எனது குழந்தையின் TLDS இனை எவ்வாறு அணுகுவது?

உங்கள் குழந்தையின், மழலையர் சேவையானது இணையவழி TLDS கருவிக்கான இணைப்பினை உங்களுக்கு வழங்கும். TLDS அறிக்கையையினைப் பூர்த்திசெய்வதற்கு இணையவழி TLDS சிறந்த வழியாகும்.

நீங்கள் இணையவழிக் கருவியைப் பயன்படுத்த முடியாவிட்டால், அதற்குப் பதிலாகக் காகித நகலைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

## TLDS இன் எந்தப் பகுதியை நான் பூர்த்திசெய்வது?

பிரிவு 1 மற்றும் 1.1 ஆகியவை உங்கள் குழந்தையின், மழலைப் பருவக் கல்வியாளரால் பூர்த்தி செய்யப்படுகின்றன.

பிரிவு 1.2 உங்கள் குழந்தையின், மழலைப் பருவக் கல்வியாளரால் பூர்த்தி செய்யப்படுகிறது. உங்கள் குழந்தைக்கு உதவும் பிற நிபுணர்களும் இந்தப் பகுதியில் சேர்க்கலாம்.

பிரிவு 2: குழந்தை என்ற பகுதியானது அவர்களுக்கு நன்கு தெரிந்த வயதுவந்தவர் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. பூர்த்தி செய்வது நீங்களாக இருக்கலாம் அல்லது அவர்களின் மழலைப் பருவக் கல்வியாளராக இருக்கலாம்.

பிரிவு 3: குடும்பம் என்ற பகுதி உங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். உங்கள் தகவலளிப்பு முக்கியமானது. இந்தப் பகுதியில் உங்கள் குழந்தையின் ஆர்வங்கள் மற்றும் பள்ளியில் உங்கள் குழந்தைக்கான உங்கள் எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொள்ள உதவும் கேள்விகள் உள்ளன. இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பது, ஆசிரியர்கள் மற்றும் OSHC ஊழியர்கள் (பொருந்துமெனில்) உங்கள் பிள்ளைக்கு எதிர்வினையாற்றவும், பிள்ளையைப் புரிந்துகொள்ளவும் உதவும். மேலும் இது அவர்களின் கற்றல் மற்றும் வளர்ச்சிக்கு உதவும்.

## TLDS செயலாக்கம் நிறைவடைந்த பின்னர் என்ன நடக்கும்?

TLDS செயலாக்கம் நிறைவடைந்த பின்னர், உங்கள் மழலைப் பருவக் கல்வியாளர் பூர்த்திசெய்யப்பட்ட நகலை உங்களுக்கு வழங்குவார்.

உங்கள் மழலைப் பருவக் கல்வியாளர், பூர்த்தி செய்யப்பட்ட TLDS இனை உங்கள் குழந்தையின் பள்ளி மற்றும் OSHC சேவையுடன் (பொருந்துமெனில்) பகிர்ந்து கொள்வார்.

உங்கள் குழந்தை எந்தப் பள்ளிக்குச் செல்வது என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்கள் மழலைப் பருவக் கல்வியாளர் TLDS-ன் இரண்டாவது நகலை உங்களுக்கு வழங்குவார். உங்கள் பிள்ளையைச் சேர்க்கும்போது இதைப் பள்ளியில் நீங்கள் கொடுக்கலாம்.

பிரிவு 3: குடும்பம் என்ற பகுதியை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை என்றால் , உங்கள் குழந்தையின் குழந்தைப் பருவக் கல்வியாளர், பள்ளி மற்றும் OSHC சேவையுடன் (பொருந்துமெனில்) மற்றய பூர்த்தி செய்த பிரிவுகளைப் பகிர்ந்துகொள்வார். மேலும் பகிரப்பட்டவற்றின் நகலையும் உங்களுக்கு வழங்குவார்.

இந்தத் தகவலைப் பகிர்ந்துகொள்வது வெற்றிகரமாக பள்ளிக்கு நிலைமாறுவதில் உதவுவதை பள்ளிகளின் ஆராய்ச்சி மற்றும் பின்னூட்டங்கள் சுட்டிக்காட்டுகின்றன. உங்கள் பிள்ளையின் பள்ளியுடன் TLDS இனைப் பகிரக் கூடாது என நீங்கள் விரும்பினால், உங்கள் குழந்தையின் மழலைப் பருவக் கல்வியாளரிடம் இதைப் பற்றிக் கலந்துரையாடவும்.

குழந்தையின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதிசெய்வதில் தேவையான அறிவையும் தகவலையும் கொண்டிருப்பதற்கு பொருத்தமானதும் பாதுகாப்பானதுமான தகவல்கள் விக்டோரியக் கல்விக்கும் பராமரிப்பு வல்லுநர்களுக்கும் உதவுகின்றன.

மேலும் தகவல்களுக்கு, https://www.vic.gov.au/information-sharing-schemes-and-the-maram-framework எனும் இணையப் பக்கத்தைப் பார்வையிடவும்.

## மேலும் தகவல்களுக்கு

மேலும் அறிந்துகொள்ள, www.vic.gov.au/transition-school-resources-families எனும் இணையப் பக்கத்தைப் பார்வையிடலாம்

இந்தத் தகவல் பல சமூக மொழிகளிலும் ஒரே இணைய இணைப்பில் கிடைக்கிறது:www.vic.gov.au/transition-school-resources-families